நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3 (CCIW), மதுரை.
முன்னிலை: திரு. எஸ். சந்திரசேகர், பி.ஏ., எல்எல்பி.,
நீதித்துறை நடுவர் எண்.3, மதுரை.
2020ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1ஆம் நாள் திங்கள்கிழமை
சி.ஆர்.எம்.பி. எண். 1104/2020

. . . . .

காந்திமதி
த.பெ. ராஜா உசேன்(லேட்) . . . மனுதாரர்/எதிரி

// எதிரிடை //

அரசுக்காக: காவல் ஆய்வாளர்
மதுரை குடிமைப்பொருள் வழங்கல் குற்ற
புலனாய்வு பிரிவு காவல் நிலையம்
குற்ற எண்.52/2020
பிரிவு 6(2)(3)(4)of TNSC(RDCS)order 1982 r/w
7(i)(a)(ii)of EC Act 1955 . . . எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

மனுதாரர்/எதிரி குவிமுச பிரிவு 437-ன்கீழ் பிணை கோரி மனு தாக்கல் செய்து இன்று என் முன்பாக விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. S.அய்யப்ப ராஜா அவர்கள் முன்னிலையாகியும், குற்ற முறையீட்டாளர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை-1 அவர்கள் முன்னிலையாகியும் இந்நீதிமன்றம் வழங்கிடும்

**உத்தரவு**

1. கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. எதிரி கடந்த 25.05.2020 முதல் கைது செய்யப்பட்டு நிலக்கோட்டை சிறைச்சாலையில் இருந்து வருகிறார் என்றும் எதிரியை பிணையில் விட வேண்டும் என்றும், இவ்வழக்கில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இறுதியாக, இம்மனு விசாரணைக்கு வந்தபோது எதிரியை பிணையில் விட வேண்டும் என்றும் இம்மனுவில் வாதிடப்பட்டது.

2. அரசு தரப்பில் எதிரி அரசு பொதுவிநியோகத்திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் ரேசன் புழுங்கல் அரிசியை TN-04-A-5603 என்ற பதிவு எண் கொண்ட லாரியில் தலா 50 கிலோ எடை கொண்ட 9 மூட்டைகளில் சுமார் 450 கிலோ ரேசன் புழுங்கல் அரிசியை சட்டவிரோதமாக தாங்கள் பணி புரியும் ரேசன் கடையிலிருந்து கடத்தி மற்ற எதிரிகளுக்கு விற்று லாபம் சம்பாதித்துள்ளதாகவும் மேலும் கொரோனா வைரஸ் (உயிர்கொல்லி) பரவும் நேரத்தில் ரேசன் அட்டைதாரர்களுக்கு வழங்கக்கூடிய ரேசன் அரிசியை கடத்தி மக்களின் வாழ்வாதரத்தை பாதிக்கக்கூடிய குற்றம் புரிந்துள்ளதாகவும் இவ்வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருவதாலும், மற்றும்

லோடுமேன் தலைமறைவாக இருந்து வருவதாலும், இவ்வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருவதாலும், மேலும் எதிரி அரசு ஊழியராக இருந்து கொண்டு தனது கடமையிலிருந்து தவறியுள்ளார் என்பதாலும் எதிரியை ஜாமீனில் விட கடுமையான ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.

3. இந்நிலையில் குற்றத்தின் தன்மை மற்றும் வழக்கின் தன்மை மற்றும் அரசு தரப்பில் கூறப்பட்ட கூற்று ஆகியவற்றை கருத்தில் கொண்டும் இவ்வழக்கில் மனுதாரர்/எதிரி 50 கிலோ எடை கொண்ட 9 ரேசன் சணல் சாக்குகளில் 450 கிலோ ரேசன் அரிசியை ரேசன் விற்பனையாளர் மற்றும் ரேசன் எடையாளர் ரேசன் கடையிலிருந்து கடத்தி மற்ற எதிரிகளின் மூலம் விற்று அதிக லாபம் சம்பாதித்துள்ளதை கருத்தில் கொண்டும், மற்றும் லோடுமேன் தலைமறைவாக இருந்து வருவதை கருத்தில் கொண்டும், அரசு தரப்பில் கூறியதுபோல் எதிரி அரசு ஊழியராக இருந்து கொண்டு தனது கடமையிலிருந்து தவறியுள்ளார் என்பதாலும், இவ்வழக்கு புலன்விசாரணையில் இருந்து வருவதாலும், மனுதாரர் குறிப்பிடும் காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் கொரோனா வைரஸ்(உயிர்கொல்லி) பரவும் நேரத்தில் ரேசன் அட்டைதாரர்களுக்கு வழங்கக்கூடிய ரேசன் அரிசியை கடத்தி மக்களின் வாழ்வாதரத்தை பாதிக்கக்கூடிய குற்றம் புரிந்துள்ளதாலும் இதை சாதாரணமானதாக கருத இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் மனுதாரர் தனது மனுவில் தனது குடும்ப வாழ்வாதாரமே தனது வருமானத்தை நம்பியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் தற்பொழுது உள்ள கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக ஊரடங்கு அமல்படுத்தப்பட்டு தொழில்கள் முடங்கப்பட்டுள்ளதால் பொதுமக்களின் வாழ்வாதாரம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு அவர்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசிய பொருட்களை பொதுமக்களுக்கு வழங்காமல் ரேசன் கடையில் இருந்து கள்ளச்சந்தையில் விற்று மற்ற பொதுமக்களின் ஜீவாதாரத்தினை பாதிக்கும் விதமாக இக்குற்றமானது நடைபெற்றுள்ள நிலையில், மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே மேற்கண்ட காரணங்களுக்காக மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது.

என்னால் 2020ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 1ஆம் நாள் அவைறிய பகரப்பட்டது.

ஓம்/- எஸ். சந்திர சேகர்

நீதித்துறை நடுவர் எண்.3
(CCIW), மதுரை.